# பனிமயம்

ஏப்ரல் 2026

ஆண்டுச் சந்தா
ரூ. 100/-

தனிப் பிரதி விலை
ரூ. 10/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே,

அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துகளும், ஆசியும். உயிர்த்த இயேசு தரும் அமைதி உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் நிரப்பிட ஜெபிக்கிறேன்.

ஏறக்குறைய 46 நாட்களை கஸ்தி நாட்கள் என்று கடைப்பிடித்தோம். தவக்காலத்தில் அதிகமாக வலியுறுத்தப்படும் ஜெபம், தியாகம்(ஒறுத்தல்), பரிகாரம், தர்மம் போன்ற நற்காரியங்களை மேற்கொண்டோம். தியானங்கள் செய்தோம், திருப்பயணங்கள் மேற்கொண்டோம், திருச்சிலுவைப் பாதைகள் ஒப்புக்கொடுத்தோம். இவைகளின் வழியாக ஆண்டவர் இயேசுவின் பாடுகளை தியானித்தோம், பாடுகளில் பங்கெடுத்தோம். மகிழ்ச்சியோடு பாஸ்கா காலத்திற்குள் நுழைந்துள்ளோம்.

பாஸ்கா என்றாலே கடத்தல் என்பது பொருளாகும். கடந்த காலங்களில் கடவுளுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்ததற்காக மனம் வருந்தினோம். அயலாரை முழுமையாக புரிந்துகொள்ள தவறியதற்காகவும், அன்பு செய்யத் தவறியதற்காகவும் இறைவனிடம் மன்னிப்புக் கேட்டு இறைவனோடும் அயலாரோடும் ஒப்புரவாகியுள்ளோம். பழைய பாவ வாழ்விலிருந்து புதிய வாழ்விற்கு கடந்து வந்துள்ளோம். எவற்றையெல்லாம் விட்டு விடுவதாக வாக்குறுதி கொடுத்தோமோ அவற்றையெல்லாம் விட்டு விடவும் எவற்றையெல்லாம் இனி கடைப்பிடிப்போம் என்று உறுதி எடுத்தோமோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்திட இப்பாஸ்கா காலத்தில் நாம் முயற்சி செய்வோம்.

பகைமை மறந்து அமைதிக்கு, சமாதானத்திற்கு கடந்து செல்வோம். உலக நாடுகளிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி நிலவ தொடர்ந்து மன்றாடுவோம். தனி மனித அதிகாரமும், ஆணவமும்தான் உலக அமைதியை கெடுத்துக்கொண்டிருக்கிறது. நாடுகளை மட்டுமல்ல வீடுகளையும் இந்த தனி மனித அதிகாரமும் ஆணவமும்தான் அழித்துக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து கடந்து வருவோம். உயிர்ப்பு தரும் மகிழ்ச்சியை பெற்றுக்கொள்வோம்.

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



உதயம் 27 தாரகை 8

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 100

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
✆ 82209 47823, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### நெருக்கடியில் உள்ள அருள்பணியாளர்களுக்காக...

தம் இறையழைத்தலில் நெருக்கடியான தருணங்களை எதிர்கொள்ளும் அருள் பணியாளர்கள் தங்களுக்குத் தேவையான உடனிருப்பைக் கண்டுணரவும், புரிந்துணர்வு மற்றும் இறைவேண்டலுடனும் சமூகங்கள் அவர்களை ஆதரிக்கவும் மன்றாடுவோம்.

# உள்ளே...


மரியன்னையின் திருப்பெயர்கள் 4


இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் 6


தரிசனம் தருவாய் தாயே... 8


உன்னதரின் உயிர்ப்பு உலகத்தின் மகிழ்வு 10


இம்மாதப் புனிதர் 11


மகிழ்வு தரும் உயிர்ப்பு 12


உயிர்ப்பில் மகிழ்வோம்... 14


புதிது புதிதாய் ... 16


விவிலியப் போட்டி 18

பனிமயப் பகிர்வு 21


புனித வாரத் திருநிகழ்வுகள் - 2026 22

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 45 திருச்செபமாலையின் அரசி!

மரியாவின் மன்றாட்டு மாலையில் "திருச்செபமாலையின் அரசி" (Queen of the most holy Rosary) என்ற பெயர் நமக்கு வியப்பைத் தருவதில்லை. காரணம், மரியன்னையும், திருச்செபமாலையும் நெடிய வரலாற்றில் பிணைக்கப் பட்டிருக்கிறார்கள். 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித தோமினிக்கிலிருந்து இந்த வரலாறு தொடங்குகிறது. அவர்தான் செபமாலை என்னும் பக்திமுயற்சியைத் தொடங்கியவர். அன்னை மரியாவிடமிருந்தே செபமாலையைப் பெற்றுக் கொண்டவர் என்னும் பெருமைக்குச் சொந்தக்காரர் அவர்.



பின்னர், 1571ஆம் ஆண்டு நடைபெற்ற லெபாந்தோ போரில் கிறிஸ்தவப் படையினர் ஒட்டோமோன் பேரரசுப் படையினரை அற்புதமாகத் தோற்கடித்தபோது, திருத்தந்தை ஐந்தாம் பயஸ் செபமாலை மன்றாட்டுதான் இந்த வெற்றியின் இரகசியம் என்று சொல்லி "புனித செபமாலையின் அரசி" என்னும் விழாவைத் தொடங்கினார். "செபமாலையின் திருத்தந்தை"என்று அழைக்கப்பட்ட திருத்தந்தை 13ஆம் லியோ 1883ஆம் ஆண்டு இதனை அகில உலகத் திருஅவை பயன்படுத்த ஊக்குவித்தார்.

செபமாலை என்பது ஒரு வெற்றியின் கருவி மட்டுமல்ல, ஒரு பாதுகாப்பின் ஆயுதமும்கூட என்று திருஅவைப் புனிதர்கள் பலரும் போதித்துள்ளனர். புனித பாத்ரே பியோ செபமாலையைத் தமது "ஆயுதம்" என்று அழைத்தார். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் செபமாலையின் வல்லமை பற்றி எழுதியுள்ளார்.

இயேசுவின் இதயத்தைத் தொடும் ஆற்றல் மிக்க மன்றாட்டு செபமாலை என்றார் புனித லூயி மரிய மான்ட்போர்ட். நாம் சந்திக்கும் சோதனைகளிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள செபமாலை பெரிதும் உதவுகிறது என்றார் அவர்.

அண்மைக் காலப் புனிதரான ஜோஸ் மரிய எஸ்கிரீவா நம் ஆன்மா சந்திக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் நமக்கு வெற்றி தரும் கருவி செபமாலை என்று எழுதினார். நாம் மீண்டும் மீண்டும் செய்யும் பாவங்களிலிருந்து விடுதலை பெற "அருள்நிறை மரியே வாழ்க" என்னும் மன்றாட்டை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும் என்றும், காதல் வயப்படுகிறவர்கள் தாங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லும்போதும் சலிப்படைவதில்லையே. அதுபோலவே, அன்னை மரியாவை அன்புடன் திரும்பத்திரும்ப வாழ்த்தும் போதும் நாம் சலிப்படைவதில்லை என்றார் அவர்.

செபமாலை என்னும் அணிகலனால் அலங்கரிக்கப்பட்ட அரசியாகத் திகழ்கிறார் நம் அன்னை. ★

# 46 குடும்பங்களின் அரசி!



மரியன்னையின் திருப் பெயர்களுள் தொன்றுதொட்டு வழங்கிவரும் பழமையான பெயர்களும் ("இறைவனின் புனித அன்னை") இருக்கின்றன. அண்மைக் காலத்தில் சேர்க்கப்பட்ட புதிய பெயர்களும் இருக்கின்றன. "அன்னை மரியா குடும்பங்களின் அரசி" (Queen of families) என்னும் பெயர் மிகவும் அண்மைக் காலத்தில் தான் லொரெட்டோ மன்றாட்டு மாலையில் சேர்க்கப்பட்டது. நினைவில் வாழும் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பவுல் கடந்த 1995ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இப்பெயரைச் சேர்க்க ஆணையிட்டார். பொதுநிலையினரின் புனித வாழ்வில் அதிக அக்கறை காட்டிய ஜான் பவுல் குடும்பங்களின் அரசியாக அன்னை மரியாவை அறிவித்ததில் வியப்பொன்றும் இல்லை.

நாம் வாழும் இக்காலம் கடினமானது. மணமுறிவு, சமய ஆர்வமின்மை, கருக்கலைப்பு போன்ற அறநெறிச் சிக்கல்கள் ஆகியன குடும்ப வாழ்வைச் சிதைக்க முயல்கின்றன என்பதை நாம் அறிவோம். "அவர்கள் இழிவான ஊதியத்திற்காகத் தகாதவற்றைக் கற்பித்துக் குடும்பம் குடும்பமாகச் சீர்குலையச் செய்கிறார்கள்" (தீத் 1:11) என்று பவுலடியார் முதல் நூற்றாண்டிலேயே எழுதியுள்ளார். அதற்கேற்ப இன்றைய தொலைக்காட்சி, அலைபேசி, சமூக ஊடகங்கள் அனைத்தும் நம் குடும்பங்களைச் சீர்குலையச் செய்கின்றன. எனவே, குடும்பங்களைப் பாதுகாக்கவும், குடும்பங்களில் நல்ல மாதிரிகள் உருவாகவும் மரியன்னையைக் குடும்பங்களின் அரசி என்று அறிவித்தார் திருத்தந்தை ஜான் பவுல்.

இன்று பணம், பொழுதுபோக்கு, உணவு, வேலை போன்றவை கடவுளின் நேரத்தையும், வழிபாட்டையும் பறித்துக் கொள்கின்றன. இல்லங்களில் நாள்தோறும் குடும்பமாக இணைந்து மன்றாடும் பழக்கம் அருகிவிட்டதால், குடும்பங்களின் சிக்கல்களும் அதிகரிக்கின்றன. எனவே, இல்லங்களில் குடும்பமாக மன்றாடும் பழக்கத்தை நாம் மீட்டெடுக்க வேண்டும்.

"விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன்" (எபே 3:14-15) என்றார் பவுலடியார். இன்றும் நமது குடும்பங்கள் நாள்தோறும் மண்டியிட்டு மன்றாடினால், குடும்பங்கள் ஆசிபெறும். குடும்பங்களின் அரசியான அன்னை மரியா நமக்காகப் பரிந்து மன்றாடி, தம் திருமகன் இயேசுவிடமிருந்து ஆசிகளையும், பாதுகாப்பையும் பெற்றுத் தருவார் என்பது இந்தத் திருப்பெயர் சுட்டிக்காட்டும் ஓர் உண்மை.

அதேவேளையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மரியா ஒரு "மாதிரி"யாக விளங்குகிறார் என்பதையும் இத்திருப்பெயர் சுட்டிக்காட்டுகிறது. திருக்குடும்பத்தின் தலைவியான மரியா நமது குடும்பங்களில் பாசம், பரிவு, மன்னிப்பு, விரைந்து உதவும் பண்பு, இறைத் திருவுளத்திற்குப் பணிதல் போன்ற நற்பண்புகள் நிலவ காரணியாகத் திகழ்கிறார்.



அருள்பணி. குமார்ராஜா



# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## மகிழ்வு தரும் உயிர்ப்பு

★ "இறைமகன் தம்மோடு இணைக்கப்பட்ட மனித இயல்பில் இறந்து, உயிர்த்தெழுந்து, சாவை வென்று, மனிதரை மீட்டார்; அவர்களைப் புதிய படைப்பாக உருமாற்றினார் (காண் - கலா 6:15 / 2கொரி 5:17). எல்லா மக்களிடமிருந்தும் கூட்டிச் சேர்க்கப்பட்ட தம் சகோதரர், சகோதரிகளுக்கு ஆவியாரை வழங்கி அறிவுக்கு எட்டா முறையிலே அவர்களைத் தம் உடலாக அமைத்தார்.

துன்பங்களுக்கு ஆளாகி மாட்சி பெற்ற கிறிஸ்துவுடன் ஒன்றித்திருக்கும் நம்பிக்கை கொண்டோர் எல்லாருக்கும், அருளடையாளங்கள் வாயிலாக இவ்வுடலில் மறைந்த, ஆனால் உண்மையான முறையில் கிறிஸ்துவின் வாழ்வு வழங்கப் பெறுகிறது. திருமுழுக்கால் நாம் கிறிஸ்துவைப் போலாகிறோம். "நாம் எல்லாரும் தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்" (1கொரி 12:13). இத்திருச்சடங்கு கிறிஸ்துவின் இறப்போடும் உயிர்த்தெழுதலோடுமுள்ள ஒன்றிப்பைக் குறித்துக்காட்டி விளைவிக்கிறது. அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம் (உரோ 6:4.5) - திருச்சபை #7.



★ **பாஸ்கா மறைநிகழ்ச்சியில் மனித ஈடுபாடு நிறைவு பெறுகிறது.**

கடவுளின் வாக்கு வழியாக யாவும் படைக்கப்பட்டன. இந்த வாக்கு மனிதராகி, மனிதர் தம் உலகில் வாழ்ந்திட வந்தார். நிறைவு பெற்ற மனிதராகிய அவர் உலக வரலாற்றில் புகுந்தார். அவ்வரலாற்றை தம்மேல் ஏற்றுக்கொண்டு அதைத் தம் தலைமையில்

ஒன்று சேர்த்தார். "கடவுள் அன்பாயிருக்கிறார்" (1யோவா 4:8) என்பதை அவரே நமக்கு வெளிப்படுத்துகிறார். அதே வேளையில், அன்பு செய்ய வேண்டுமென்ற புதிய கட்டளையே மனிதரின் அடிப்படைச் சட்டம் எனவும் அவர் நமக்குக் கற்பிக்கிறார். எனவே, அன்பின் பாதை எல்லா மனிதருக்கும் திறந்து இருக்கின்றது எனவும், அனைத்துலகச் சகோதரத்துவத்தை நிறுவும் முயற்சி வீணானதல்ல எனவும் அவர் இறையன்பில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உறுதியளிக்கின்றார். மேலும், இவ்வன்பு பெரிய காரியங்கள் மட்டும் பின்பற்ற வேண்டிய ஒன்றல்ல; மாறாக, முக்கியமாக, வாழ்க்கையில் சாதாரணச் சூழல்களில் நாம் பின்பற்ற வேண்டியதொன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாவிகளாகிய நம் அனைவருக்காகவும் தம் உயிரைக் கொடுத்த அவர், நீதியையும் அமைதியையும் நிலைநாட்டப் பாடுபடுபவர்களின் தோள்மேல் ஊனியல்பும் உலகமும் சுமத்தும் அச்சிலுவையை நாமும் தாங்க வேண்டுமென தம் முன்மாதிரிகையால் நமக்குக் கற்பிக்கின்றார்.

"தமது உயிர்த்தெழுதலால் ஆண்டவராக ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்து விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் பெற்றுள்ளார். தம் ஆவியின் வல்லமையால் மனிதரின் உள்ளங்களில் அவர் செயல்புரிந்து வருகிறார். - இன்றைய உலகில் திருச்சபை #38.

★ மனிதருக்காக இயேசு சிலுவையில் துன்புற்று இறந்து உயிர்த்தெழுந்தபின் ஆண்டவராகவும் மெசியாவாகவும் என்றென்றும் குருவாகவும் நியமிக்கப் பெற்றவராக விளங்குகின்றார் (காண். திப 2:36 / எபி 5:6, 7:17-21). தந்தையால் வாக்களிக்கப் பட்ட ஆவியை அவர் தம் சீடர்கள்மேல் பொழிந்தார். - திருச்சபை #5.

### ★ ஞாயிறு ஆண்டவரின் நாள்

கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்தே உருவான திருத்தூதர்களின் மரபுப்படி, திருச்சபை பாஸ்கா மறை நிகழ்ச்சியை ஒவ்வோர் எட்டாம் நாளாகிய ஞாயிறன்று கொண்டாடுகின்றது. எனவே, இந்நாள் ஆண்டவருக்குரிய நாள் - அல்லது - ஆண்டவரின் நாள் என அழைக்கப்படுகிறது முறையே. ஏனெனில், கடவுளின் வார்த்தையைக் கேட்டும், நற்கருணை விருந்தில் பங்குகொண்டும், ஆண்டவர் இயேசுவின் துன்பங்கள், உயிர்த்தெழுதல், மாட்சிமை ஆகியவற்றை நினைவிற்குக் கொணர்ந்து, "இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்குப் புதுப்பிறப்பு அளித்து, குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ" (1பேதுரு 1:3) வழி செய்த கடவுளுக்கு நன்றி கூறுவதற்கு இந்நாளில் கிறிஸ்தவ மக்கள் ஒன்றுகூட வேண்டும். ஆகவே, ஆண்டவரின் நாளாகிய ஞாயிறு தொடக்கத்திலிருந்தே வந்துள்ள பெருநாள். மேலும், இந்நாள், மகிழ்ச்சிக்குரிய நாளாகவும், உழைப்பினின்று ஓய்வு பெறும் நாளாகவும் திகழும்பொருட்டு, இதை நம்பிக்கை கொண்டோருக்கு எடுத்துக் கூறி, அவர்களைப் பயிற்றுவித்து, அவர்கள் இறைப்பற்றை வளரச் செய்ய வேண்டும். உண்மையிலேயே மிக முக்கியமானவையாய் இருந்தாலன்றி, வேறு எந்த வழிபாடுகளுக்கும் இந்த நாளில் முதன்மை வழங்கப்படக் கூடாது. - திருவழிபாடு #106.

*தொகுத்தளிப்பவர் :*

**கலாபன் வாஸ்**

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 8



யுவான் டியேகோவின் கால்கள் வேகமாய் நடந்தன. உள்ளத்திலோ ஒரே சிந்தனைதான். படுத்த படுக்கையாய்க் கிடக்கும் தன் மாமாவுக்கு நோயில்பூசுதல் வழங்கியே ஆக வேண்டும். அதையும் வேகமாக செய்தாக வேண்டும். கண்ணுக்கெட்டும் தூரத்தில் தெப்பியக் மலை தெரிந்தபோது யுவானின் உள்ளத்தில் இன்னொரு புதிய கவலை முளைத்தது.

இன்று திங்கள் கிழமை ஆயிற்றே, மாதாவைப் பார்க்க மலைக்கு வருகிறேன் என்று அவருக்கு வாக்குக் கொடுத்தேனே. மலையருகில் சென்றால் கண்டிப்பாக அன்னை மரியாவின் காட்சி கிடைக்கும். ஏற்கெனவே மூன்று முறை தனக்காகக் காத்திருந்த அன்னை இப்போதும் நிச்சயம் காத்திருப்பார். அப்படியென்றால் கண்டிப்பாக அன்னையிடம் பேச வேண்டியிருக்கும். பேசினால் நேரமும் ஆகும். ஒருவேளை அன்னையைச் சந்திப்பதால் காலதாமதம் ஏற்பட்டு, தன் மாமாவின் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டால்......? இறப்பின் விளிம்பில் இருக்கும் அவர் நோயில்பூசுதல் பெறாமலே அவரது உயிர் பிரிந்துவிட்டால்.....? யுவானால் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை. இப்போதைக்கு மாமாவுக்கு நோயில்பூசுதல் கொடுப்பதுதான் முக்கியம். தெப்பியக் மலைவழியைத் தவிர்த்துவிட்டு வேறுவழியாகச் செல்லத் தொடங்கினார் யுவான் டியேகோ.

மனம் முழுக்க மாமா யுவான் பெர்னார்டினோ மட்டும் தான் இருந்தார். அவரோடு பழகிய நாள்கள், அவர் பேசிய வார்த்தைகள், அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால் தனக்கென்று யாருமே இல்லாமல் தான் எப்படி வாழப் போகிறோம் என்ற எண்ணம். கண்களின் ஓரத்தில் வெளிப்பட்ட கண்ணீரைத் துடைத்து நிமிர்ந்த யுவான் திடுக்கிட்டுப் போனார். திடீர் ஒளிவெள்ளம். ஒளிவெள்ளத்தின் நடுவில் மீண்டும் அதே அன்னை.

“மகனே யுவானிட்டோ, என்னைப் பார்த்துவிடக் கூடாது என்றா வேறு வழியில் போகிறாய்?” ஆதங்கத்துடன் பேசிய அன்னையின் குரலைக் கேட்டதும் இதயம் நொறுங்கிப் போனார் யுவான். கண்களில் தாரைதாரையாய் கண்ணீர் ஊற்றெடுக்க வெடித்தே விட்டார். “அம்மா, என் அன்புத் தாயே, என்னை மன்னித்துவிடுங்கள் அன்னையே! அனைத்தும் அறிந்த ஆண்டவனின் தாயாகிய உங்களைவிட்டு நான் எப்படியம்மா ஓடி ஒளிய முடியும்? என் நிலைமை அப்படி ஆகிவிட்டதே” பொங்கி அழுதார் யுவான்.

கண்களைத் துடைத்தவாறே தன் சோகக் கதையை அன்னையிடம் சொல்லத் தொடங்கினார். தன் மாமாவின் அன்பு, அவர் இப்போது படுக்கையில் கிடக்கும் நிலை, அவர் இறந்துவிட்டால் அதற்குப் பின் தன் தனிமை வாழ்க்கை, அவருக்கு நோயில்பூசுதல் வழங்க விரும்பும் யுவானின் ஆசை என ஒன்றுவிடாமல் அனைத்தையும் அன்னையிடம் கொட்டிவிட்டார். "சரி போ" என்று அன்னை சொல்வார் என்று யுவான் டியேகோ எதிர்பார்த்தபோதுதான் அன்னை திருவாய் மலர்ந்து அந்த அன்பு வார்த்தைகளைச் சொன்னார். குவாதலூப்பே காட்சிகளிலேயே அன்னை பேசிய அற்புத வார்த்தைகள் அவை. "மகனே, யுவான், உனக்கு நான் இல்லையா? உன் துன்பத்தைப் போக்க, உன் கண்ணீரைத் துடைக்க உன் தாய் நான் இல்லையா? உன் துன்ப நேரத்தில் என்னிடம் அல்லவா நீ வரவேண்டும்? அதை விட்டுவிட்டு எங்கெங்கோ ஓடுகிறாயே?"

அன்னையின் அன்பில் அமைதியானார் யுவான். "தாயே, என் மாதாவே, நீங்களா இப்படிப் பேசுவது? ஒரு அற்ப மனிதன் நான் உங்களிடமிருந்து இவ்வளவு பெரிய வார்த்தைகளைக் கேட்கிறேனே. கடவுளையே உங்கள் மகனாகப் பெறும் பாக்கியம் பெற்ற நீங்கள் என்னையா உங்கள் மகன் என்கிறீர்கள்? இந்த ஏழை உங்கள் மகனா? நீங்கள் இந்த அபலைக்கு அன்னையா? உங்களிடமிருந்து இவ்வளவு பெரிய அன்பைப் பெற்ற பிறகு இனி எனக்கு என்ன வேண்டும்? இப்போதே என் உயிர் போனாலும் எனக்கு ஆனந்தம் தான்" அன்னையின் அன்பில், அது தந்த மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார் யுவான்.

அமைதியாக அன்னை தொடர்ந்து பேசினார்: "மகனே ,உனக்கு மிகப்பெரிய பணி ஒன்று தரப்பட்டிருக்கிறது. நீ அதைப் பார். உன் மாமாவின் உடல்நலத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். அவரது நோய் முழுமையாகக் குணமாவது என் பொறுப்பு. நான் உனக்குக் கொடுத்த கட்டளையை ஏற்று நீ செயல்படு. ஆயர் கேட்டபடியே நான் உனக்காக அடையாளத்தைத் தயாராக வைத்திருக்கிறேன். நான் உனக்கு சொன்ன பணியை நீ செய். நீ செய்யவேண்டிய பணியை நான் செய்கிறேன்" அன்னையின் வார்த்தைகள் யுவானுக்கு நிம்மதியைத் தந்தன. "நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? ஆணையிடுங்கள் அம்மா" உற்சாகமாகப் பேசினார் யுவான். "மலையுச்சிக்குப் போ" என்றார் அன்னை.

அன்னை சொன்னபடியே மலையுச்சிக்குச் சென்ற யுவான் டியேகோ அதிர்ச்சியில் உறைந்து போனார். அவரது கண்களை அவராலேயே நம்பமுடியவில்லை. அப்படி அங்கே என்ன நடந்தது? ஆயர் கேட்டபடி நம்பிக்கைக்குரிய அடையாளத்தை அன்னை கொடுத்தாரா? கேள்விகளோடு காத்திருங்கள், அடுத்த இதழ் வரை.



**அருள்பணி.**
**க.செ. பிரவீன் ராசு**

**அடுத்த மாத இதழ்,**
**"தொழிலாளர்களின் கனவுகள்"**
**எனும் தலைப்பில்**
**தொழிலாளர் சிறப்பிதழாக வெளிவருகின்றது.**
**படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

# உன்னதரின் உயிர்ப்பு உலகத்தின் மகிழ்வு



பிறப்பே மகிழ்வாகி பூவாய் மலரும்..
பனிப்பூ பார்த்தோர் பாரில்தான் வளர்வர்..
வெறுப்பே விதையாகி வேறிடத்தே காண
மறுப்பே பகையாக வாய்மை.. நிலையாமோ..
கரைப்பார் கரைத்தால் கல்கரையும் பொய்யோ..
தரைக்குள் நீர்தேடும் தன்மை வேர்க்காகும்..
மறைத்தார்.. தெய்வம் மாமகவாய் உதிப்பதையே..
அன்னை மனதிருத்தி தனியிடத்தே செபித்தார்..

விண்மீன் வழிகாட்ட ஞானியரும் நடந்தார்..
வினைக்குள் விதையான பகையதனைக் கடந்தே..
கண்மீன் துயிலாமல் காடுகரை கடந்தார்..
கன்னியுடன் தாதைசூசை மாபுனிதர் இசைந்தே
முன்னோர் விழிதேடும் மீட்பை எம்மான்
இயேசுபிரான் மீட்பர் சிலுவையிலே ஈந்தார்..
விண்ணோர் முரசறைய.. கண்டோர் அதிர்ந்துவிழ..
வந்தார் நிலமதிர ஆங்கே வெண்மதியாய்..

விழிகளின் விருந்தே வாழ்தல் வாழ்ந்திருத்தல்..
விதிவழியிடை இருப்போர் மகிழ்வர்.. மகிழ்ந்திருப்பர்..
பொழிவதில் வான்மகிழும் வான்துளி மண்வீழும்..
பொருளுடை அருளுரையே பொய்களை வேரறுக்கும்..
உழைப்போர் உன்னதரே.. விண்ணகம் நிறைவேறும்..
உயிர்த்தல் உயிர்ப்பொருளே.. விண்ணவர் அருங்கொடையே..
உலகோர் பெரும்பேறே.. அன்னவர் தரும்உயிர்ப்பை
விதைப்போம் நானிலமே மகிழ்ந்திட மகிழ்ந்திடவே..







# இம்மாதப் புனிதர்

## புனித சியென்னா கத்தரீன்

கத்தரீன் 1347ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் இத்தாலியில் உள்ள சியென்னாவில் பிறந்தார். ஜாகோடா மற்றும் லாபோ டேவிஸ்காசா இவருடைய பெற்றோர் ஆவர். கடவுள்மீதும், அன்னை மரியின்மீதும் சிறுவயதிலிருந்தே அதிக பக்தி கொண்டவர். இவர் ஒவ்வொருமுறையும் வீட்டு மாடிப்படியை ஏறி இறங்கும்போதும் “அருள் நிறைந்த மரியே வாழ்க” என்ற செபத்தை சொல்லிக்கொண்டே இருப்பார்.

இவரது தாய் இவரை ஒரு பணக்கார இளைஞனுக்கு மணமுடித்து கொடுக்க நினைத்தார். ஆனால் இவரோ நான் யாரையும் மணக்கப் போவதில்லை. என் வாழ்வு முழுவதையும் கிறிஸ்துவுக்கே அர்ப்பணிக்க முடிவு செய்துள்ளேன் என்று தன் தாயின் முடிவிற்கு எதிர்ப்பு தெரிவித்தார். இவர் வீட்டில் ஓர் அறையில் தன்னை அடைத்துக்கொண்டு செபத்திலும், தவத்திலும் தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

இவர் தனியாக செபித்தபோது நிறைய சாட்சிகள் வழியாக இறைவன் கத்தரீனம்மாளுக்கு தன்னை வெளிப் படுத்தினார். இவர் தனியாய் இருந்து செபிக்கும்போது அன்னை மரியும், இயேசுவும் அவருக்குத் தோன்றினர். இவர் நற்கருணையை மட்டுமே உணவாக உட்கொண்டு பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். இவர் தனது பதினெட்டாவது வயதில் டொமினிக்கன் மூன்றாம் சபையில் உறுப்பினராக சேர்ந்தார்.

இவர் வாழ்ந்த காலத்தில் திருச்சபையில் பல குளறுபடிகள் இருந்தன. அதில் முக்கியமானது திருத்தந்தை பதினோராம் கிரகோரியார் பிரான்சில் உள்ள அவிஞ்ஞோன் என்ற இடத்தில் சிறையிலிருந்தார். கத்தரீன் தான் பெருமுயற்சி எடுத்து திருத்தந்தையை உரோமைக்கு அழைத்து வந்தார்.

அந்த காலக்கட்டத்தில் இயேசு வாழ்ந்த புனித பூமியான பாலஸ்தீன் இஸ்லாமியரின் கட்டுக்குள் இருந்தது. எனவே இவர் திருத்தந்தையை அணுகி அதை மீட்டுத் தருமாறு வேண்டுகோள் விடுத்தார். அதன்படி எதிரிநாட்டவர்மீது சிலுவைப் போர்கள் தொடுக்கப்பட்டு புனித நாடுகளை மீட்கும் பணி தொடங்கியது. இவர் நாடுகளுக்கு இடையில் அமைதி ஏற்படுத்துவதில் வல்லவராக இருந்தார்.

ஒருமுறை பிரிசா என்ற நகரில் இருந்த ஆலயத்தில் செபித்துக் கொண்டிருந்தபோது ஐந்துகாய வரங்களைப் பெற்றார். இதனால் இவர் பெரிதும் அவஸ்தைப்பட்டார். இதனால் ஆண்டவரிடம் தன்னை இன்னும் அதிகமாக அர்ப்பணித்துக் கொண்டார். இவருடைய டைலாக் (Dialogue) என்ற புத்தகம் மிகவும் பிரபலமானது.

பல்வேறு பணிகளை திருச்சபைக்கு செய்த கத்தரீன் 1382ஆம் ஆண்டு ரோம் நகரில் விண்ணகப் பிறப்படைந்தார். 1461ஆம் ஆண்டு இவர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். 1970ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுல் இவரை திருச்சபையின் மறைவல்லுனராக உயர்த்தினார்.



அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்

# மகிழ்வு தரும் உயிர்ப்பு


இயேசுவின் பாஸ்கா, இருளின் மீதான ஒளியின் வெற்றி விழா. இயேசுவின் உயிர்ப்பு, இருளில் எதிர்பாராத மகிழ்ச்சியின் குரல். மரணத்தின் மீதான வாழ்வின் மாட்சி மிகுந்த வெற்றி. இயேசு, "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள்; நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்" என்கிறார்.

"தோல்வியின் இடிபாடுகளிடையே எழுந்த நம்பிக்கையின் மறுபிறப்பு" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் உயிர்ப்பே கிறிஸ்தவத்தின் நம்பிக்கை, அடித்தளம். உயிர்ப்பு இல்லையென்றால் கிறிஸ்தவம் இல்லை.

"கல்லறை வாயிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்" (மாற் 16:3)

மகதலா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி மூன்று பெண்களும் தங்களுக்குள் பேசிக்கொண்ட இந்த வார்த்தைகள் நம்பிக்கையை இழந்ததுபோல இருந்தாலும் இயேசுவின் உயிர்ப்பு தெளிவற்ற மற்றும் துயரமான நிலையை அழித்தொழித்தது. ஏழு பேய்கள் பிடித்த பெண் என்று அனைவராலும் ஒதுக்கப்பட்ட பெண் மகதலா மரியா, இயேசுவின் கருணையால் உயிர்த்த இயேசுவை முதலில் பார்த்த பெண் மட்டுமின்றி, இயேசுவின் மகிழ்வு தரும் உயிர்ப்பு செய்தியை திருத்தூதர்களுக்கு அறிவிப்பவராகவும், வரலாற்றில் இடம் பெறுபவராகவும் திகழ்கிறாள். உயிர்த்த இயேசுவின் உண்மையான அன்பு அவளை அளவில்லாத மகிழ்ச்சிக்குள்ளாக்கியது





"மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புடையதாய் உயிர் பெற்று எழுகிறது; வலுவற்றதாய் விதைக்கப்படுவது வல்லமையால் உயிர் பெற்று எழுகிறது" (1கொரி .15;44),

இயேசுவோடு ஒன்றித்து வாழ்ந்து, அவரது இறைத்தன்மையை அறிந்த திருத்தூதர்கள், இயேசுவின் பாடுகளை கண்டு, அச்சத்தாலும், குழப்பத்தாலும் மூழ்கியிருந்த வேளையில், இயேசுவின் உயிர்ப்புச் செய்தி அவர்களின் சந்தேகம் நீங்கி நம்பிக்கையை தோற்றுவித்து, அழுகையில் இருந்து மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. அவர்களின் பயத்திலிருந்து துணிவையும், இயேசுவின் உயிர்ப்புதான் அவர்களின் போதனைக்கு கருப்பொருளாகவும் இருந்து இறையாட்சியை உலகமெங்கும் பரவ செய்தது.

ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்தால் அவர் புதுப்படைப்பாக மாறுகிறார் தடைக்கல்லாக இருந்த துன்பம், பயம், போன்றவை நீங்கி மகிழ்ச்சி மட்டுமே நிறைவாக இருக்கும் என்பது உறுதி. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மீட்பு வரலாற்றின் சிகரம் மட்டுமின்றி, அது சட்டம், பாவம், சாவு ஆகியவற்றினின்று மனிதர் பெறும் முன்னடையாளமாகும்.

தன் மகனின் பாடுகளோடு ஒன்றித்து, வியாகுலத்தின் தாயாக விளங்கிய நம் அன்னை மரியா, தன் மகனின் உயிர்ப்பால் வெற்றியின் அரசியாக, மகிழ்ந்து அக்களிப்புக் கொள்கிறாள். தனக்கு நேர்ந்த வியாகுலத்தை, துன்பத்தை, துயரத்தை மீட்பின் கருவியாகக் கொண்ட நம் அன்னையின் துணிவைப் போற்றுவோம் புனிதத் திருஅவை அன்னை மரியாவுக்கு அன்பு காட்டி, மகிழ்வுடன் தியானிக்கிறது. திருமுழுக்கினால் கிறிஸ்துவோடு ஒன்றிக்கும் அனைவரும் இம்மையிலேயே கிறிஸ்துவோடு உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகின்றனர்.

"அன்பில் நம்பிக்கை வையுங்கள். அது துயரத்தில் கொண்டுபோய் விட்டாலும் பரவாயில்லை. இதயக் கதவை மூடி விடாதீர்கள்" - ரவீந்திரநாத் தாகூர்.


கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்தே உருவான திருத்தூதர்களின் முறைப்படி ஒவ்வொரு எட்டாம் நாளாகிய ஞாயிறன்று கொண்டாடுகின்றது. எனவே இந்நாள் ஆண்டவருக்குரிய நாள் அல்லது ஆண்டவரது நாள். கடவுளின் வார்த்தையைக் கேட்டும், நற்கருணை விருந்தில் பங்கு கொண்டும் ஆண்டவர் துன்பங்கள், உயிரத்தெழுதல் மாட்சிமை ஆகியவற்றை நினைவிற்கு கொணர்ந்து, (1பேது. 1;3) இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்கு புதுப்பிறப்பு அளித்து, குன்றா எதிர்நோக்கோடு வாழ வழிசெய்த கடவுளுக்கு நன்றி சொல்ல மக்கள் அனைவரும் ஒன்று கூட வேண்டும். மிக முக்கியமானவையாய் இருந்தாலன்றி வேறு எந்த வழிபாடுகளுக்கும் முதன்மை வழங்கப்படக்கூடாது. இந்நாளே திருவழிப்பாட்டு ஆண்டு முழுவதன் அடிப்படையாகவும், மையக்கருவாகவும் துலங்குகின்றது. (சங்க ஏடுகள், திருவழிபாடு எண் 106).

இத்தகைய மகிழ்ச்சிக்குரிய இயேசுவின் உயிர்ப்பு (பாஸ்கா) நம்மை மீட்கும் புதுப் பிறப்பாக, நேர்மைத் திறத்துடன் வெற்றியைக் குவித்து, நெஞ்சமெல்லாம் நல்லெண்ணத்தை வளர்க்கும் மகிழ்ச்சிக்குரியதாக அமைவதாக!



**ரோஸ் சேவியர்**

# உயிர்ப்பில் மகிழ்வோம்...



“தாமஸ் அய்யா! இந்தாங்கையா. வாடகைப் பணம்” என்று குரல் கொடுத்துக்கொண்டே தாமஸின் வீட்டிற்குள் நுழைந்தான் சார்லஸ்.

தாமஸின் தூரத்து உறவினரின் மகன்தான் சார்லஸ். கிராமத்தில் அவன் தாயுடன் வசித்து வந்தான். அவனுடைய இரு சகோதரர்கள் திருமணமாகி தனியே வசித்து வந்தார்கள்.

அவன் தாய் திடீரென்று மறைந்தபோது, அடக்கத்திற்கு சென்றிருந்த தாமஸ், சார்லஸ் வேலை இல்லாமல், தனிமரமாக இருந்ததைப் பார்த்து, இரக்கப்பட்டு, தன்னோடு அழைத்து வந்து தனக்கு சொந்தமான கடையை வாடகைக்குக் கொடுத்தார். அவனும் மளிகை சாமான்களை விற்று கடையிலேயே தங்கிக் கொண்டான். அவ்வப்போது தாமஸ் குடும்பத்திற்கும் உதவியாக இருந்தான்.

தாமஸ், அவன் மனைவி மரியம்மாள், மகள் புனிதா மூவரும் அவனை அவர்கள் வீட்டுப் பிள்ளையாகக் கருதி பாசம் காட்டி வந்தார்கள்.

“வாப்பா சார்லஸ்! உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்” என வரவேற்றார் தாமஸ்.

“என்னைய்யா, ஏதாவது உதவி தேவைப்படுகிறதா?” அக்கறையுடன் கேட்டான் சார்லஸ்.

“அது... வந்து... நம்ம புனிதாவுக்கு சம்பந்தம் முடிச்சு வைச்சிருக்கோம் இல்லையா. நானும் கொஞ்சம் கொஞ்சமா ஏற்கனவே நகையைச் சேர்த்து வச்சிட்டேன். ரொக்கத்துக்குத்தான் பணம் தேவைப்படுது. அதான்... கடையை வித்தறலாம்னு பார்க்கிறேன். அதற்காக உன்னைக் கைவிடமாட்டேன். எங்ககூடவே வச்சி, ஒரு வேலையும் வாங்கித் தந்திருவேன். கடையை விற்க ஏற்பாடு செய்வியாப்பா?” தயக்கத்துடன் கெஞ்சினார் தாமஸ்.

“நீங்க கவலைப்படாதீங்கய்யா. என்கிட்ட சொல்லிட்டீங்கல்ல.. கச்சிதமா முடிச்சிறேன். புனிதா கல்யாணத்தை பிரம்மாண்டமாக நடத்திருவோம்” என்று கிளம்பியவன், மனதில் பளிச்சிட்ட சிந்தனையால் திரும்ப வந்தான்.

“ஐயா! கடையை விற்க வேண்டாம்யா. நானே பணம் தர்றேன்யா. இந்த அநாதைக்கு ஆதரவு தந்த உங்களுக்கு இந்த நேரத்துல உதவி செய்யலைன்னா நான் மனுஷனே இல்லைய்யா” என்று பேசியவனைப் பார்த்து சிரித்தபடி வந்த புனிதா, “என்ன சார்லஸ்! என்மேல உள்ள பாசத்துல உளறாத. உன்கிட்ட ஏது அவ்வளவு பணம்?” அவன்மேல் பரிதாபப்பட்டு கேட்டாள்.



எங்க அம்மாவுக்கு சொந்த வீடு இருக்குதுல்ல. எங்க அண்ணன்மார்கிட்ட கேட்டு என் பங்கை வாங்கிட்டு வாரேன்" என்று உற்சாகமாக கிளம்பினான். ஆனால் அவன் அண்ணன்மார்கள் இருவரும் அம்மா வாழ்ந்த வீட்ல இருக்காமல், வீட்டை விட்டு ஓடியவனுக்குப் பங்கு கிடையாது என விரட்டி விட்டார்கள்.

அதேவேளை, புனிதாவுக்கு பேசிய மாப்பிள்ளையின் தந்தை தாமஸின் வீட்டிற்குச் சென்று, "சம்பந்தி, உயிர்ப்புத் திருவிழா அன்று வரதட்சணை தந்துருவீங்கல்ல. அன்றைக்கே தாலி செய்யக் கொடுக்கணும்" என்றார்.

"சம்பந்தி கடையை விற்க ஏற்பாடு செய்திருக்கேன். விற்றவுடன் பணம் தந்திடரேன்" என உறுதி கூறினார், தாமஸ்.

"என்னது! கடையை வித்துதான் பணம் தரணுமா? வெளிய தெரிஞ்சா எங்க கௌரவம் என்ன ஆகும்! என் மகன் படிப்புக்கும், வேலைக்கும் எத்தனையோ வரன்கள் வரிசையில இருக்காங்க. ஏதோ உங்க மக படிச்சிருக்கா. வேலைக்கு அனுப்பினால் இரண்டுபேர் சம்பளம் வந்தால் வசதியாக இருக்குமேன்னுதான் சம்மதிச்சோம். நீங்க கடையை வித்து கல்யாணம் நடத்துற வரைக்கும் காத்திருக்க முடியாது. அத்தோடு எங்களுக்கு இது கௌரவக் குறைச்சலா தெரியுது. நாங்க வேற இடம் பார்த்துக்கிறோம்" தீர்க்கமாகச் சொல்லிவிட்டு சென்றுவிட்டார், மாப்பிள்ளையின் தந்தை.

"விடுங்கப்பா, மாதா எனக்கு நல்ல மாப்பிள்ளைத் தேடித் தருவாங்க" அப்பாவுக்கு ஆறுதல் சொன்னாள் புனிதா.

மறுநாள் சோர்ந்த முகத்துடன் வந்தான் சார்லஸ். அவன் முகத்தைப் பார்த்தே பணம் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட புனிதா, "சார்லஸ்! உனக்குப் பணம் தரமாட்டாங்கன்னு தெரியும். இனி எங்க அப்பாவ ஐய்யான்னு கூப்பிடாத" கோபத்துடன் கத்தினாள்.

"அப்படிச் சொல்லாத புனிதா. வேற இடத்துலக் கேட்டு எப்படியாவது பணம் புரட்டித் தர்றேன்" அழுதான் சார்லஸ்.

அதெல்லாம் முடியாது. நீ இனிமே எங்க அப்பாவை, மாமான்னுதான் கூப்பிடனும்" என்று கூறிவிட்டு வெட்கத்தால் முகத்தைக் கைகளால் மறைத்துக்கொண்டாள்.

ஸ்தம்பித்து நின்றார்கள், தாமஸும், சார்லஸும்.

"சார்லஸ், எங்க துன்பத்தைக் கண்டு துடிக்கிற உன்னைவிட நல்ல மாப்பிள்ளை யார் கிடைப்பா?" கலங்கிய கண்களுடன் கூறினாள் புனிதா.

உயிர்ப்புப் பெருவிழாவில் சார்லஸ் - புனிதா நிச்சயதார்த்தம் நிறைவேற, இயேசுவின் உயிர்ப்பு அவர்களுக்கு நிறைவான மகிழ்வைத் தந்தது.



**ரெஜினா கிரகோரி**

## செபிக்கின்றோம்

### இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 10. | ஜெயசீலி கர்டோசா | கென்சி பர்னாண்டோ | 01.03.2026 | திவ்விய பாலன் |

# புதிது புதிதாய் ...



– நம் முத்துநகர் மக்கள் ஒரு ஆண்டை மூன்று பகுதிகளாக கடந்து வருவோம் .

1. புத்தாண்டு முதல் தவக்காலம் வரை
2. உயிர்ப்பு பெருவிழா முதல் பனிமய அன்னை திருவிழா வரை
3. திருவிழாவுக்கு பின் கிறிஸ்துமஸ் வரை

முதல் பகுதியின் நிறைவில் இந்த கட்டுரையை வாசிக்கிறீர்கள். தவக்காலம் முழுவதும் தானம், தர்மம், ஆன்மீக திருப்பயணங்கள், உண்ணா நோன்பு, செபம் என கடந்து வந்திருப்போம். ஒவ்வொரு ஆண்டும் இது தொடர்கதைதான்.

பாடுகளின் வாரமும் இயேசுவின் உயிர்ப்பும் நமது கிறிஸ்தவ வாழ்வில் குறிப்பிடத்தக்க தா(க்)கத்தை, மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படி இல்லையே ஏன்? என யோசிப்பவர்களுக்கு மட்டும் இந்த கட்டுரை. இந்த உயிர்ப்பின் மகிழ்ச்சியை நாம் உணர எது தேவை? என்பதே நம் முன் நிற்கும் மில்லியன் ரூபாய் கேள்வி?

உலகக் கோப்பை இருபது ஓவர் கிரிக்கெட் தொடர் சமீபத்தில் தான் நடந்து முடிந்திருகிறது நம்மில் பலரும் கிரிக்கெட் ரசிகர்கள் என்பதால் அதிலிருந்தே ஒரு எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம். சூப்பர் ஓவர்தான் வெற்றியைத் தீர்மானிக்கப்போகிறது என முடிவான பின், களத்தில் இறங்குவது பயமென்பதை அறியாத விளையாட்டு வீரர்களாகவே இருப்பார்கள். அணியின் தலைசிறந்த பந்துவீச்சாளர்தான் அந்த ஓவரைப் போடப்போகிறார் என்பது தெரிந்தும் துளியும் தயக்கமின்றி எதிர்கொள்வார்கள். அந்த அணிக்கு வெற்றி சாத்தியப்படும்.

மகத்தான மாற்றங்களின் தொடக்கப்புள்ளி என்பது மாபெரும் ஆபத்தான, குழப்பமான அச்சம் தரக்கூடிய சூழலாகவே இருக்கும். ஆனால், அதைக் கடக்காமல் மாற்றம் என்பது



சாத்தியம் இல்லை. மாற்றத்துக்கான சூழலை எதிர்கொள்ள அஞ்சுகிறவர்கள், புதிய தொடக்கங்களைச் சந்திப்பதில்லை. அவர்களது வாழ்க்கைத் தோட்டத்தில் புதிய மலர்கள் பூப்பதில்லை. அவர்களின் வானத்தில் புதிய விடியல்கள் தோன்றுவதில்லை.

மாற்றங்கள் வரும்போது... சவால்கள் குறுக்கிடும்போது... அதைப் பேராபத்தாக நினைத்து ஒதுங்கலாம். அல்லது, பெரும் வாய்ப்பாகக் கருதி வரவேற்கலாம். நமது மனநிலையே இரண்டில் ஒன்றை உறுதி செய்கிறது. பலர் மாற்றத்தை ஏற்பதில்லை. இருப்பதற்கு சொகுசாய்ப் பழகிவிட்ட மனித மனம் ஒரு சிறிய மாற்றம் நிகழ்ந்தால்கூட நிம்மதி இழந்துவிடுகிறது.

சிலர் வெளியூர் போக வேண்டுமே என்பதற்காக நல்ல கல்வி நிறுவனத்தில் படிக்க கிடைத்த வாய்ப்பை, நல்ல நிறுவனத்தில் கிடைத்த வேலையை ஏன் நல்ல திருமண வரனை கூட மறுத்திருக்கலாம். தங்களுடைய நிலையை உயர்த்த நினைப்பவர்கள், தமது எல்லைகளை மறு வரையறை செய்யத்தான் வேண்டும் . கடவுளும் அதைத்தான் செய்தார் . அதன் பெயர் உயிர்ப்பு.

தானே மனு உரு எடுத்து தன் நிலை விட்டு இறங்கி வந்தார். இறைவனது அருள் மனிதர்களுக்கு முழுமையாகக் கிடைப்பதைத் தடுத்து கொண்டிருந்த சாவான பாவத்தை வெல்ல வேண்டும் . அதனை செய்யப் போவது யார்? எனும் கேள்விக்கு தானே விடையாக வந்தார். அதனை எப்படிச் செய்தார்? எனும் இணைகேள்வியின் விடைதான் உயிர்ப்பு. உலகம் ஒரு வழியில் சிந்திக்கும் போது மாற்று கோணத்தில் சிந்திப்பவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் அப்படிப்பட்ட மாற்று கோணங்கள்

உயிர்ப்பு - சாவான பாவத்தில் உழன்று கொண்டிருந்த மனித குலத்தை அருள் நிலைக்கு உயர்த்தியது. தவக்காலத்தில் நாம் நிறைய சிலுவைப் பாதைகளில் பங்கு கொண்டிருப்போம். ஆண்டவரின் பாடுகளை தியானிக்கும் சிலுவைப் பாதையில் பதினான்கு நிலைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனநிலையின் வெளிப்பாடு. ஆனால் எல்லாவற்றிலும் பொதுவாக சோகம் இருக்கும். யோசித்துப் பார்த்தால் உயிர்ப்பு என்பது பதினைந்தாவது நிலை. சோகத்தைக் கடந்த மகிழ்ச்சி நிலை.. பாடுகளைக் கடந்து வரும் வெற்றி நிலைக்கும் எனும் கருத்தை உரைக்கும் உன்னத நிலை. கஷ்டப்படாமல் வாழ்வை வாழ நினைக்கும் நமக்கு ஒரு உன்னத நோக்கிற்காக உழைக்க உற்சாகப்படுத்தும் சம்பவம் இயேசுவின் உயிர்ப்பு.

தினசரி நமது உடலுக்குள் இருக்கும் செல்கள் இறந்து புதிதாய் பிறப்பதை வளர்ச்சி என்கிறோம். உயிர்ப்பின் அனுபவத்தை நமது உடலில் உணரும் நாம் மனதில் உணர்வோம். அதுவே நமது ஆன்மீக வளர்ச்சி ஆகட்டும். இந்த உயிர்ப்பு பெருவிழாவில் நாமும் நமது எண்ணங்களும், நமது நம்பிக்கையும் நல்ல மாற்றங்களை எதிர்கொண்டு புதிது புதிதாய் பிறக்கட்டும். சிறக்கட்டும், உயிர்க்கட்டும் தொடர்ந்த பக்தியோடு பாடுகளின் வாரத்தை கடந்து உயிர்ப்பின் உன்னதத்தை உள்ளத்தில் உணர, அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துகள்.



முனைவர். சி. ஜாக்சன்



# விவிலியப் போட்டி 132

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 21 முதல் 28 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

## I. ஓரிரு வார்த்தையில் விடையளி :

1. பழிபாவமில்லாதவரை காட்டிக் கொடுத்து பாவம் செய்தேன் என்று கூறியவர் யார்?
2. தங்கள் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெய் எடுத்துச் சென்றவர்கள் யார்?
3. ஓசன்னா என்னும் எபிரேயச் சொல்லுக்கு என்ன பொருள்?
4. வாரத்தின் முதல்நாள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றவர்கள் யார்?
5. இயேசு பெத்தானியாவில் யாருடைய இல்லத்தில் இருந்தார்?

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

6. என் இல்லம் ........................................ வீடு என அழைக்கப்படும்.
7. அவன் நேராக இயேசுவிடம் சென்று ........................................ எனக் கூறிக்கொண்டே அவரை முத்தமிட்டான்.
8. தந்தை, மகன் ........................................ பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.
9. ........................................ என்னும் பேர்போன கைதி ஒருவன் இருந்தான்.
10. கடவுளுக்கு உரியவற்றை ........................................ கொடுங்கள்.

## விவிலியப் போட்டி 131

**மார்ச் 2026** — விடைக்குறிப்புகள்

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 16 முதல் 20 வரை**

| | | |
|---|---|---|
| 1. | பார்வையற்ற இருவர் இயேசுவைப் பார்த்து | 20:33 |
| 2. | பேதுரு இயேசுவை பார்த்து | 17:4 |
| 3. | இயேசுவை பின்பற்ற விரும்பிய செல்வரான இளைஞர் இயேசுவிடம் கேட்டது | 19:16 |
| 4. | சீமோன் பேதுரு இயேசுவிடம் | 16: 16 |
| 5. | சீடர்கள் இயேவிடம். | 18:1 |
| 6. | இயேசு சீடர்களை பார்த்து | 17:20 |
| 7. | இயேசு சீடர்களிடம் | 16:6 |
| 8. | இயேசு சீடர்களிடம் | 19:26 |
| 9. | பேதுருவிடம், கோவில் வரியாக இரண்டு திராக்மா தண்டுவோர் | 17:24 |
| 10. | இயேசு சீடர்களிடம் | 16:13 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.04.2026**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) — அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 216**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 130**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. திவ்ய பாலன் அன்பியம் — **சகாயராணி தனராஜ்**
2. பாத்திமா மாதா அன்பியம் — **ஸ்டெபி ரீகன்**
3. இரக்கத்தின் மாதா அன்பியம் — **சகாயராணி**
4. ஜூடு அன்பியம் — **கிறிஸ்டோ ஜெபினா**

## பாராட்டுக்குரியவர்கள் : 126

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா
6. ரீனா மொறாயிஸ்
7. ஜெயா
8. லீனா கருணா
9. ஜெசி
10. சரோஜா மஸ்கரனாஸ்

**அன்னை தெரசா**
11. ஜூலியட்ஸ் ரூபி
12. ரெய்ஸா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி**
13. டென்சி
14. கவாஷினி ஆல்வின்
15. குரூஸ் ஷாலினா
16. ஜெரினா செல்வம்
17. நான்சி
18. பிரவீனா ரவிக்குமார்
19. அலைனா சந்தலேனா
20. லிசியா ஜெகதீஷ்
21. வெர்ஜின் பிரைனா
22. மிஷல் மிரல்

**கிறிஸ்தரசர்**
23. ரெக்ஸ் கிரீன்வெல்
24. லூரட் வசந்த்
25. ஜாய் ரோச்
26. ஜீலியட் சாவியோ
27. செலஸ்கி கிளமென்ட்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
28. சுகன் மோனிஷா
29. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
30. ராஜா ஜரின்
31. ஆண்ட்ரியா
32. சுரேஷ் பிரேமா

**திவ்ய பாலன் அன்பியம்**
33. ஸ்டார்லக் ஏஞ்சலின்
34. சென்சிலா சகாயராஜ்
35. பிரின்சி

**பாத்திமா மாதா**
36. சுகந்தா ஸ்டெனி
37. பிச்சம்மாள்
38. அனு ஆல்வின்
39. ரீனா ராஜா
40. லிண்டா சீலன்
41. புளோரின் ஜீவிதா

**இரக்கத்தின் மாதா**
42. சேவியர் அம்மாள் கோமஸ்
43. பிரைட்டன் ஜெரோபின்
44. சித்ரா மோத்தா
45. பாப்டிஸ்டா
46. செல்வி புரோ
47. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**
48. சகாயம்மாள் பெனடிக்ட்
49. கல்யாணி செல்வராஜ்
50. சேவியர் ஏஞ்சல்

**ஜூடு அன்பியம்**
51. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
52. ஜோ டிரினிஷா
53. ஜூலியஸ் தல்மேதா
54. அல்பின்
55. ரஸ்கின் வசந்தா
56. செல்வராணி
57. சார்லட் பிராங்
58. சாந்தி ஆல்ட்ரின்
59. எலிஜா இம்மானுவேல்
60. வெனிட்டாள்
61. ஜெயா அகஸ்டின்
62. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
63. பெர்லி டென்சன்
64. கிறிஸ்டி லிஸ்டன்
65. பெனி முறாய்ஸ்

**குழந்தை இயேசு**
66. மோனிகா செபஸ்டின்
67. எமல்டா
68. சுகிர்தா
69. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
70. ரொசாரி கோமஸ்
71. வெர்ஜினியா
72. லீமாரோஸ் ஜாய்
73. ஹெபிட்டா
74. சகாயராஜா சகாயராணி

**லூர்து மாதா**
75. ஆலிவர் வி. ராயர்
76. ஜெனோ சேவியர்
77. ரோஸ்லின் தாமஸ்
78. பிலோகோமஸ்
79. ரஜூலா ஜான்போஸ்கோ
80. சாண்டினா
81. லூர்து லினட்

**மிக்கேல் அதிதூதர்**
82. ஜோஸ்பின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
83. சுரேஷ் ஆனி
84. ஜாக்குலின் வினோதினி
85. ராணி
86. ஜூடு ரதி
87. அந்தோணிசாமி

**பவுலடியார்**
88. ஒபிலியா தாமஸ்
89. ராஜா ரோஸ்லின்

**பரிபூரண மாதா**
90. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
91. இம்மாக்குலேட் சதீஷ்
92. லூடா கான்ஸ்டன்
93. அண்டோ எல்ஃபினா
94. தெரசா பிரகாஷ்
95. டிரைபேனா
96. மேத்யூ கர்டோசா
97. சித்ரா அலாய்
98. டிஃபானி அண்டோ
99. ஸ்னோ ஆல்பிரிக்
100. பெலிக்ஸ் சோபியா

**இராயப்பர்**
101. டெய்ஸி
102. நேவிஸ் அம்மாள்
103. போஸ்கோ ரெனோ
104. ரொமில்டா வெனான்சிஸ்

**சவேரியார்**
105. டெலிலா அமலன்
106. அனுஷியாபீட்டர்
107. வினிஸ்டா ஷெரின்
108. ஜோர்னல் ஜென்ஸி
109. ஜான்சி ஜெயக்குமார்
110. ஜாஸ்மிலின் அல்டோ சாலமோன்

**செபஸ்தியார்**
111. ஜெஸிலா சேவியர்
112. அந்தோனியம்மாள் டென்சிங்
113. பிரவீனா

**சிந்தாயாத்திரை மாதா**
114. ஜூடி ஆரோக்கியராஜ்
115. டோனஸ் ராயன்
116. லாசர் செல்வி
117. நேசம்

**சிறுமலர் அன்பியம்**
118. எல்சிட்டா ஆனந்தன்
119. விஜிலியா
120. தாயம்மாள்
121. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**
122. ஹேமலதா சேவியர்
123. மென்சி
124. கிறிஸ் ரீஜோ
125. கிரேஸ்லின்

**திருச்சிலுவை**
126. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
127. ரமணி டிவோட்டா
128. ஆரோன் ஷாரோன்

**வியாகுல மாதா**
129. ஜெரிஷா
130. ஸ்பெயிலின் மதியா

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 86

**பரிசு பெறுபவர்கள் : 4**

131. தருவைக்குளம் **மைக்கேல் ஸ்டிபானி**
132. திருப்பூர் **ததேயூஸ் கரோலின்**
133. சார்லஸ்கோவில் **ரூபி ஏஞ்சல்**
134. இஞ்ஞாசியார்கோவில் **சகோ. லோரா மேரி**

## பாராட்டுக்குரியவர்கள் : 82

**சென்னை**
135. ரெஜினா கிரகோரி
136. மேமா ஸ்டீபன்
137. கமலஜோதி ஜெயசீலன்
138. ஆண்டனிகா ஷெர்லி
139. ஜோதி ஜெரால்ட்
140. பிரேமாகுணசீலன்

**கொடைக்கானல்**
141. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
142. சகோ. ஜான்சிமேரி
143. ஜெஸிந்தா மேரி
144. சகோ. கீர்த்தனா ரூத்

**திருச்சி**
145. மோனிட்டா கிறிஸ்டி
146. மேத்யூ விவேக்
147. டோனி

**நெய்வேலி**
148. ஜோசப்

**ஆறுமுகநேரி**
149. ஜெயராணி
150. தொம்மை அந்தோணி

**ஆலந்தலை**
151. பொன்சேகா தங்கராஜ்
152. மரியம்மாள்

**தருவைக்குளம்**
153. லில்லி சோபியா
154. ஜோஸ்பின் ஷீலா

**தேனி**
155. குழந்தை திரேஸ்

**கோவில்பட்டி**
156. பிரவீன் குமார்

**கயத்தார்**
157. அமல்ராஜ்

**கடலூர்**
158. ஹென்றி தாஸ்

**வீரபாண்டியபட்டணம்**
159. ரேச்சல் ராயன்

**உவரி**
160. ஆர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
161. ஸ்நோவின்

**அரசூர் பூச்சிக்காடு**
162. அந்தோணி ஜெயக்குமார்

**சூலூர்**
163. சத்யா சேவியர்

**சருகணி**
164. சகோ. பெரைறா

**சங்கரன்கோவில்**
165. செல்வமேரி

**பராசூர்**
166. ஜாக்லின்

**உத்தமபாளையம்**
167. கரோலின் பெலவேந்திரன்

**கோவளம்**
168. சரோபின் ஜோசப்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
169. ரமோலா கமிலஸ்
170. டீனுராய் ஜேசுபாலு
171. கிரேட்டா ராஜா
172. பீட்டர் ஜெயந்தி
173. பெஸ்டஸ் மச்சாடோ
174. ஜெயா ஃபெலிக்ஸ்

**குருஸ்புரம்**
175. ஆசிர்வாதம்
176. பௌவுசி ஜோ மைக்கேல்
177. பிளாசி செல்வராஜன்
178. ஜான்சி மென்டிஸ்
179. மாசில்லா

**லயன்ஸ் டவுண் சகாயமாதா**
180. டார்லிமா அமுதன்
181. டோமினிக்
182. ரோஸ்மலர் ஜோன்ஸ்

**அன்னை வேளாங்கன்னிகோவில்**
183. சலேத் எலிசா
184. செக்கரியா சாமுவேல்

**யூதா ததேயு கோவில்**
185. ஜூடி ரீத்தம்மாள் மேரி
186. ரோஸ் சேவியர்
187. இம்மானுவேல் சேகர்
188. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
189. லூர்து சுவிதா
190. ஜெனட் சேவியர்
191. ஆரோக்கிய சர்மிளா

**அந்தோணியார் கோவில்**
192. இருதயம்மாள் கபிரியேல்
193. வயோலா ஜான்சன்
194. மென்சிலா லொயோலா
195. ரீடன்
196. டயானா வினோத்

**காந்தி நகர்**
197. ரியா லினோ
198. கிளமென்சியா மேக்டன்
199. செலஸ்டின்
200. பிண்டன் சோபியா
201. லிபியா பிராங்ளின்
202. ரமேஷ் நர்மதா

**அண்ணாநகர்**
203. வென்சி ராணி

**சார்லஸ் கோவில்**
204. சகாயிட்டா மச்சாது
205. அல்போன்சா பர்னான்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
206. சூசை நெவின்
207. சகோ. மரிய சூசைரூபி
208. சகாய ஷீலா
209. பாத்திமா ஏஞ்சலின்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
210. வெர்ஜின்
211. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
212. கோல்வின் ஜேசுராஜ்
213. ஸ்நோ வெண்டா
214. கிருபா

**பாத்திமா நகர்**
215. ஷர்மிளா ரமேஷ்
216. மேரி ஹம்லின்

**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 243**
**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 216**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 21)

ஏப்ரல் 2026

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

### நிகழ்ந்தவை

★ 07.03.2026 சனி தவக்காலத் திருப்பயணம் மூன்று பேருந்துகளில் புறப்பட்டது.

★ 10.03.2026 செவ்வாய் எஸ்கலின் திருப்பயணிகள் இல்லக் கண்காணிப்புக் குழு கூட்டம் நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றது.

★ 11.03.2026 புதன் பேராலய பங்கு மேய்ப்புப் பணிக்குழு

நிதிக்குழுக் கூட்டம் - மாலை 06.15 மணிக்கும்

செயற்குழுக் கூட்டம் - மாலை 07.00 மணிக்கும்

நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றன.

★ 12.03.2026 வியாழன் பேராலய பங்கு மேய்ப்புப் பணி பேரவையின் பொதுக்குழு கூட்டம் அந்தோணியார் அரங்கத்தில் நடைபெற்றது.

★ 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞாயிறு மறைக்கல்வி குழந்தைகளுக்கு சிறப்பு சிலுவைப்பாதை நடைபெற்றது.

★ 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை

காலை - மறைக்கல்வி குழந்தைகளுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டன.

மாலை - மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் தலைமையில் நமது பேராலயத்திலிருந்து திரு இருதயங்களின் பேராலயத்துக்குத் தவப்பவனி நடைபெற்றது.

★ 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை “திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு” காலை 06.15 மணிக்கு சவேரியார் மண்டபத்திலிருந்து குருத்தோலைப் பவனியும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.

### நிகழ இருப்பவை

★ 02.04.2026 முதல் 05.04.2026 (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி) புனித வாரத் திருநிகழ்வுகள் புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.

★ 10.04.2026 வெள்ளிக்கிழமை நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.

★ 12.04.2026 ஞாயிற்றுக் கிழமை “திருமண வரன் மற்றும் குழந்தைக்காக காத்திருப்போருக்காக” நோன்பு வழிபாடு நடைபெறும்



# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

### தூத்துக்குடி

## புனித வாரத் திருநிகழ்வுகள் - 2026



## 02.04.2026 - புனித வியாழன் - ஆண்டவரின் இராவுணவு

| | |
|---|---|
| **மாலை 06.00** | பேராலய வளாகத்தில் திருப்பலி, பாதம் கழுவும் சடங்கு. திருப்பலி முடிவில் திவ்விய நற்கருணை இடமாற்றுப் பவனி நடைபெறும். தொடர்ந்து பேராலயத்தில் திவ்விய நற்கருணை ஆராதனை நடைபெறும். |
| **இரவு 08.00 - 08.30** | சவேரியார், பவுலடியார் மண்டல அன்பியங்கள் |
| **இரவு 08.30 - 09.00** | அந்தோனியார், மணல் மாதா மண்டல அன்பியங்கள் |
| **இரவு 09.00 - 09.30** | பாத்திமா மாதா, அன்னை தெரசா மண்டல அன்பியங்கள் |
| **இரவு 09.30 - 10.00** | சூசையப்பர், இராயப்பர் மண்டல அன்பியங்கள் |
| **இரவு 10.00 - 10.30** | செபஸ்தியார் மண்டல அன்பியங்கள் |
| **இரவு 10.30 - 11.00** | கிறிஸ்து அரசர் மண்டல அன்பியங்கள் |
| **இரவு 11.00 - 12.00** | பொது ஆராதனை |
| **இரவு 12.00** | நகர வீதிகளில் **பெரிய சிலுவைப் பாதை** பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் நடத்தப்படும். |

## 03.04.2026 - புனித வெள்ளி - ஆண்டவரின் திருப்பாடுகள்

| | |
|---|---|
| **காலை 05.00 முதல் மாலை 03.00 வரை** | அமைதியில் திவ்விய நற்கருணை சந்திப்பு. தனியாகவும், குடும்பமாகவும் ஆராதனை செய்யலாம். இன்று **உண்ணா நோன்பு** (ஒருசந்தி), **புலால் நோன்பு** (சுத்தபோசனம்) கடைப்பிடிப்போம். |
| **காலை 11.30** | பேராலயத்தை சுற்றி சிலுவைப் பாதை. |
| **மாலை 6.00** | திருப்பாடுகளின் வழிபாடு<br>திருச்சிலுவை ஆராதனையின்போது பசி, பிணி ஒழிப்புக்காக, அறப்பணிக்காக தாராளமாக காணிக்கை செலுத்துங்கள்.<br>வழிபாட்டின் முடிவில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஆசந்தி சுரூபம் முத்தி செய்வதற்காக வைக்கப்படும். |



## 04.04.2026 - புனித சனி

இன்றைய நாள் முழுவதையும் அமைதியில் கழிப்போம்.

## உயிர்ப்புப் பெருவிழா (திருவிழிப்பு)

| | |
|---|---|
| **இரவு 11.00 மணி** | பாஸ்கா திருவிழிப்புத் திருப்பலி<br>திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்க மெழுகுதிரி கொண்டு வாருங்கள். |

## 05.04.2026 - உயிர்ப்பு ஞாயிறு



| | |
|---|---|
| **காலை 6.30 மணி** | முதல் திருப்பலி |
| **காலை 8.00 மணி** | இரண்டாம் திருப்பலி<br>**ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறாது.** |
| **மாலை 6.30 மணி** | செபமாலை, உயிர்த்த இயேசுவின் திருவுருவப் பவனி, திவ்விய நற்கருணை ஆசீர் |

## 06.04.2026 - உயிர்ப்பு திங்கள்

| | |
|---|---|
| **மாலை 5.00 மணி** | அனைத்து இல்லங்களும் பாஸ்கா நீரால் புனிதப்படுத்தப்படும். |

## விண்ணக வாழ்வின்
# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்" (எசாயா 62:3)



தாயின் மடியில்
14.09.2002

இறைவனடியில்
17.04.2023

# S. CROSSWIN RAFAEL

அன்பு மகனே! மண்ணோடு உன் பூவுடல் மறைந்துவிட்டாலும்
உன் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை! பாசமான உன் நினைவுகளை
எங்களிடம் விட்டு சென்றதுடன் நாங்கள் உன்னை நினைத்தவுடன்
கண்களில் இருக்கிறாய் கண்ணீராக!

இறைவா! முடிவில்லா உமது அருள்ஒளி
இவர்மேல் என்றும் ஒளிர்வதாக!

### நீங்கா நினைவுகளுடன்

அன்பு தந்தை : DMAF. சுரேஷ் அன்பு தாய் : J. லொரைட்டா
அன்பு அக்கா : S. கிறிஸ்ரோஷல் அன்பு மச்சான் : S. சிக்சன்
அன்பு மருமகள் : S. ஜோனா கிறிஸ்டல்
மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்

**நினைவுத் திருப்பலி**

17.04.2026 அன்று காலை 6.30 மணிக்கு
தூத்துக்குடி, பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப்
பேராலயத்தில் வைத்து நடைபெறும்.

## விண்ணக வாழ்வின்
# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

“பசும்புல்வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்.
அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்” (திபா 23:2)



மண்ணில்
11.03.1960

விண்ணில்
24.04.2024

# D. சகாயராஜா மொறால்

வயது : 64

**பிரிவால் வருந்தும்**

மனைவி : S. சகாயராணி
மகன், மகள், மருமக்கள், பேரன்கள், பேத்தி
மற்றும் குடும்பத்தினர்

நினைவுத் திருப்பலி

24.04.2026 - காலை 6.30 மணி
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாகவும் இருப்பாய்" (எசாயா 62:3)



மண்ணுலகில்
23.05.1961

விண்ணுலகில்
17.04.2025

## P. அன்டன் கர்டோசா

உறவுகளோடு : 64

என் இறுதிமூச்சு இருக்கும்வரை
என்னுடன் இருப்பாய் என நான் நம்பினேன்.
வாழ்ந்தது போதும் என இறைவனிடம் சென்றாயோ,
இறைவனிடம் எனக்காக மனுப் பேசுவாயா

அன்பு சகோதரி :
**மார்சலின் கர்டோசா**

நினைவுத் திருப்பலி

காலை 5.30 மணி, 6.30 மணி, மாலை 5.30 மணி
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

மனைவி : அ. லொரைட்டா
மகன் : மரிய திலீபன் யோசுவா
மகள் : லீமாரோஸ்
பேரன் : ஜோசப் சாம்

# 12ஆம் ஆண்டு நினைவு

"உயிர்ப்பும் உயிரும் நானே.
என்னில் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவா 11:25)



தோற்றம்
12.05.1935

மறைவு
08.04.2014

# S. மிக்கேல் பர்னாந்து

வயது : 78

(தூத்துக்குடி மாநகராட்சி பணி நிறைவு)

இறைவா நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்.
முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.
இவரது ஆன்மா சாந்தி பெறுவதாக.

## பிரிவால் துயருறும்

மனைவி : M. மேக்லின் கொரைறா

ஏக மகன் : M. ஜெயக்குமார்

மருமகள் : J. சுபாஜெயக்குமார்

பேரன் : J.K. சுதர்லன் B.E.
MMSI MARITIME(INDIA)PVT.LTD.,
(Trainee Marine Engineer)

பேத்தி : J.K. இன்பென்டா B.Com.,LL.B.,(Hons)
சென்னை

3பி/348, சாந்திநகர், முதல் தெரு, தூத்துக்குடி - 8.
அலைப்பேசி : 9500805152

"நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்"
(திபா 65:4)

## விண்ணக வாழ்வின்

# முப்பதாம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
07.05.1944

தேவ தாயின் மடியில்
10.03.2026

# L. ஜோசப் பர்னான்டஸ்

## ஜெபம்

தாவீதின் குமாரனாகிய இயேசுவே எங்கள்மீது இரக்கமாயிரும்.
இனிய இயேசுவே உமது திருத்தோளின் கடூர காயத்தைப் பார்த்து
இவ் ஆத்துமத்தின் பேரில் இரக்கமாயிருந்து
உமது சிலுவையின் பாதையின் வழியாய்
இந்த ஆத்துமத்தை மோட்ச பாக்கியத்தில் சேர்த்தருளும்.

*பிரிவால் வருந்தும்*

மகன்கள், மகள், மருமகன், மருமகள்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்

Plot No.2, Casa De Amor, 2nd Floor, Devaraj Street, VGN Lakshmi Nagar,
Mugaliwalkam, Chennai - 600 125.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

"நேர்மையுள்ளோர் மக்கள் மனத்தில் என்றும் வாழ்வர்" (திபா 112:6).



பிறப்பு
26.05.1958

இறப்பு
05.04.2025

# திருமதி. அ. சகாயம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எல்லோர் உள்ளத்திலும் நிறைந்தவளே!
நினையாத நேரத்தில் மின்னல்போல் நீ மறைந்தாலும்
கண்ணீரால் எம்மை உருகவைத்த எங்கள் ஜீவனை
உன்னையே தினந்தோறும் நினைக்க வைத்தாய்!

**நினைவுத் திருப்பலி**

நாள் : 06.04.2026
நேரம் : காலை 6.30 மணி
இடம் : பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

---

**பிரிவால் வருந்தும்**

மகன்கள், மகள், மருமகன், மருமகள்
பேரன், பேத்திகள்
மற்றும் குடும்பத்தினர்கள்

SHINY Ph : 98421 31493